பொய்யாமொழி

ஆசிரியர்_ம. பாஸ்கரனர்.

செய்யா மொழிக்குந் திருவள்ளுவர் மொழிந்த
'பொய்யா மொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

16 NOV 1950 MADRAS

கதிர் 1 } திருவள்ளுவர் ஆண்டு 1981, ஐப்பசி 30 (15—11—50) புதன்கிழமை { மணி 12

அரசீர் காண்பீர்!

டா. இளங்கோவன், அரசர் கல்லூரி.

மொழியிலே விழிப்புற்ருர் தமிழ் நாட்டார்
இழிமொழியை அழித்திட்டார் இமைப் போழ்தில்
எள்ளளவும் இரக்கமிலா அமைச்சர் நீவிர்
துள்ளிவருந் தமிழர் கூட்டம் காண்பீரின்றே!

பச்சையான பசிலவார்த்தை வலைக்குட் பட்டு
சூழ்ச்சியினல் வகுப்புரிமை பறித்து விட்டீர்
ஆர்த்து நின்ற மக்களின்றே ஒக்கலோடு
முரசினையே முழக்கு கின்றார் அரசீர்காண்பீர்!

சாதியிலே உயர்ந்தோ னென்று சதிசெய்த
வேதியரின் விவேக மெல்லாம் ஒழிக
என்று, வாள் கொண்டார் சமர்
புரிய, தமிழ ரின்று அரசீர்காண்பீர்!

உயிரனைய உரிமைதனை ஒழித்த பின்னர்
மயிர் நீப்பின் வாழாவாம் கவரியேனும்
வள்ளுவரின் தெள்ளுதமிழ் உளத்திற் கொண்டு
துள்ள வருங் காளைகளை அரசீர்காண்பீர்!

வார இதழ். ★ விலை அணு 1.

வாழ்த்துச் செய்தி

தியாக, மதியழகன் (தி. சோமசுந்தரம்)
பொருட்காப்பாளன், தி. மா. மு. க. குடந்தை.

மதிப்பிற்குரிய "பொய்யாமொழி" ஆசிரியர் அவர்கட்கு.

வணக்கம். தம் பொய்யாமொழி கண்டு களிப்பெய்தினேன். நன்றிகெட்ட இந்நாட்டில் 'பொய்' மொழிகளுக்குத்தான்மதிப்பு இன்று. ஆனால் தாமோ 'பொய்' மொழியினை புறமுதுகிடச் செய்து, 'பொய்யாமொழி' பரப்ப முனைந்துள்ளீர்.

நல்ல பணி. போற்றுகிறேன் தம்மை. வாழ்த்துகிறேன் தம் உள்ள உரத்தை. வளர்க 'பொய்யாமொழி' வாழ்க தம் தூய உள்வம்!! பயன்பெறுக திராவிடம்!!!

அறிவிப்பு.

உடையார்பாளையம் தாலுகா செந்துறை பிர்க்கா
வன்னியர் கல்வி வளர்ச்சிக் கழக மாநாடு.

19—11—50 ஞாயிறு பிற்பகல் 2மணிக்கு பொன்பரப்பி கிராமத்தில்
திரு. பூ. கணேசன் M. A. அவர்கள்
சீரிய தலைமையில் நடைபெறும்.

நிகழ்ச்சிகள்

1 இறை வணக்கம்
2 வரவேற்புரை
3 சென்ற கூட்ட அறிக்கை படித்தல்
4 தலைவர் முன்னுரை
5 சொற்பொழிவுகள்:
(அ) 'வன்னியர் வளர்ச்சி'
திரு, வ. செயச்சந்திரன் அவர்கள்
'பல்லவநாடு' ஆசிரியர் சென்னை
(ஆ) 'வாழ்ந்த பரம்பரை'
தலைவர் அவர்கள்.
(இ) 'நம் எதிர்கால வாழ்க்கை'
திரு. திருக்குறள் V. முனிசாமி B.A., B.L.
அவர்கள் 'குறள்மலர்' ஆசிரியர் கடலூர்.
(ஈ) 'ஆசிரியர் வேலாயுதம் தொண்டு'
திரு. கோ. இரா. விசுவநாதன் M.A.
அவர்கள் ஆவணப்பதிவாளர் திட்டக்குடி.
6 தலைவர் முடிவுரை
7 நன்றி கூறல்

அன்பர்கள் பலரும் உறுப்பினராகச் சேர்ந்தோ, நன்கொடை வழங்கியோ கழகத்துக்கு ஆதரவு அளிப்பதுடன் மாநாட்டுக்குத் தவறாது வந்து அறிவோர்களின் சிறந்த சொற்பொழிவுகளைக் கேட்டுப் பெரும் பயனை அடையும்படி வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

பொன்பரப்பி
1—11—50.

இங்ஙனம்
மாநாட்டு வரவேற்புக் குழுவினர்

பணக்காரன [illegible]

திருமதி. ஆரோக்கியசாமி.

சென்ற இதழில் தோழர் ஒருவர் தனக்குத் தோன்றிய பணக்காரன் யார்...? என்ற ஐயத்திற்கு விடை பகர்ந்துள்ளது விநோதமாகத் தோன்றுகிறது,

நம் நாட்டிலே இன்று முக்கியமாக இருபெரும் பிரிவுகள் உள்ளன. ஒன்று ஏழைகள், மற்றொன்று பண மூட்டைகள். மனிதன் மனிதனாகவாழ மிக அவசியமான சில தேவைகள் இல்லாமல் வாடி அல்லலுறும் கூட்டத்தினரே ஏழைகள். உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இடம் இம்மூன்றுமே அந்த முக்கிய தேவைகள். தனித்திருப்பவனுக்கும், குடும்பத் தலைவனுக்கும் இவைகளே மிகவும் அவசியம். இவைகளைப்பெறாத தொழிலாளிகள், உழவர்கள், நெசவாளிகள். குறைந்த ஊதியத்திலிருக்கும் எழுத்தாளர்கள் இவர்களே ஏழைகளில் சில பகுதியினர்.

தம்முடைய தேவைக்கு அதிகமாக பெற்றுள்ளவர்கள் பணமூட்டைகள். செல்வந்தன், பணக்காரன், முதலாளி என்பவர்கள் பணமூட்டைகளில் காணப்படும் சில பிரிவுகள், தங்களுடைய தேவைக்கு அதிகமாக ஊதியம் பெறுவோரும் பணத்தை வாரியிறைத்துப் பிறரை கொல்லச்செய்யும் வக்கீல் சட்டநாத பிள்ளையின் பரம்பரையினரும், தேர்தலில் பணத்தை வாரியிறைத்து ஓட்டுகளை வாங்குவோரும். இவ்வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள்.

அந்த இரண்டு வகுப்பினருக்கும் இடையே பெரும் வேற்றுமை உள்ளது. தோழர் கூறிய கந்தல் வேட்டிக்காரனே ஏழை. நல்ல சட்டையுடையவன் ரூ. 150-க்கு சூட்டுத் தைக்க படும் அவதி நியாயம்தானா? வில்வண்டியில் செல்பவன் "வாக்ஸால்" சவாரி விரும்புவது தர்மம்தானா? கட்டவேட்டியின்றித் தவிக்கும் ஏழையின் கஷ்டமும், உழுதால்தான் உணவு என்றிருக்கும் உழைப்பாளி மாடு இல்லாமல் படும் அவதியும், தோழர் கூறிய சூட்டுத்தைக்கவும், வாக்ஸால் வாங்கவும் படும் அவதியும் ஒன்றுதானா? மேற்கூறியது நியாயமான அவதி. பின்கூறியது நியாயமற்றது. அது அவதியல்ல ஆணவம். அதுதான் பணத்தின் செருக்கு. அதுதான் பணக்காரரின் பேராசை. அதை ஒடுக்கவேண்டும். அதை ஒடுக்கி மேற்கூறிய உழைப்பாளிகளுக்கு உதவவேண்டும்.

"ஒருமனிதன் தனக்கு என்னென்ன தேவை என்று கருதுகிறானோ, வாழ்க்கையில் எந்தவிதமான சுகத்தை அனுபவிக்க வேண்டுமென்று நினைக்கிறானோ, எந்த நிலையில் வாழவேண்டும் என்று விரும்புகிறானோ, எந்த அளவோடு அவனுடைய மனம் பூரணதிருப்தி அடைகிறதோ அவ்வளவையும் பெற்று எவன் நிம்மதியாகவும் திருப்தியாகவும் காலங்கழிக்கின்றானோ அவனே செல்வந்தன்" என்கிறார் தோழர். இக்கருத்தை ஆதாரமாகக்கொண்டு சிறிது ஆராய்ந்து பார்க்கில் உலகத்திலேயே ஒரு செல்வந்தனையும் காண்பது அரிது.

—தொடர்ச்சி 8ம் பக்கம் பார்க்க

சென்ற இதழ் தொடர்ச்சி

மகாபாரதம்

வில்லிதரும் விளக்கம்,

ஆதிபருவம்] [குருகுலச்சருக்கம்

ஆசிரியர் U. S. இராமசாமிப் பிள்ளை செயங்கொண்டம்.

—:—

முன்பு சந்திரனது பிறப்புப்பற்றிய வரலாறுகளைக் கூறிய செய்யுளைப்பற்றி ஆராய்ந்தோம்: இப்போது அடுத்துள்ள செய்யுளில் சந்திரன் புதன் என்னும் புதல்வனைப் பெற்ற வரலாறு குறிப்பிடப்படுகிறது அதைப்பற்றி ஆராய்வோம்,

அச்செய்யுள்:—

"அந்தி ஆரண மந்திரத் தன்புடனிவனை
வந்தியாதவர் மண்ணினும் வானினுமில்லை,
புந்தியாலுயர் புதனெனும் புதல்வனை மகிழ்வால்
தந்துயாவரும் களிப்புற இருக்கும் நாள் தன்னில்."

என்பதாம்

இதில் சந்திரனை மாலைக்காலத்தில் மண்ணுலகிலுள்ளாரும் விண்ணுலகிலுள்ளாரும் வணங்குகின்றார் என்றும் அவன் புதன் என்னும் புதல்வனைப் பெற்றான் என்றும் கூறப்படுகிறது.

இ—ள்; அந்தி-மாலைகாலத்தில், ஆரணம் வடமொழிவேதத்திற்கூறிய. மந்திரத்து-நாப்புடை பெயராதுஉச்சரிக்கும்வார்த்தையால், அன்புடன்-பக்தியுடன், இவனை - இச்சந்திரனை, வந்தியாதவர் - வணங்காதவர், மண்ணினும்-பூவுலகத்திலும், வானினும் - ஆகாயஉலகத்திலும், இல்லை-ஒருவருமில்லை; (மானிடர் தேவர்யாவரும் வணங்குகிறார் என்பது கருத்து.) (இச்சந்திரன்) மகிழ்வால் - (வியாழகுருவின் மனைவியாகிய தாரையைச் சோரமார்க்கமாகக்கூடிச்) சந்தோஷத்துடன் புந்தியால்-அறிவினால், உயர்-மேம்பட்ட, புதன்எனும் புதல்வனை-புதன் என்னும் பெயருடைய புத்திரனை, தந்து-பெற்று, யாவரும் எல்லோரும், களிப்புஉற-மன இன்பம்மிகும்படி, இருக்கும் நாள்தன்னில்-இருக்கிற காலத்தில், எ—று.

இ—பு: மாலைக்காலத்தில் வடமொழி வேதத்திற் கூறிய நாப்புடை பெயராது உச்சரிக்கும் வார்த்தையால் பக்தியுடன் இச்சந்திரனை வணங்காதவர் பூவுலகத்திலும் ஆகாய உலகத்திலும் ஒருவருமில்லை. (மானிடர் தேவர் யாவரும் வணங்குகிறார் என்பது கருத்து) இச்சந்திரன் வியாழகுருவின் மனைவியாகிய தாரையைச்சோரமார்க்கமாகக்கூடிச் சந்தோஷத்துடன் அறிவினால் மேம்பட்ட புதன் என்னும் பெயரையுடைய புத்திரனைப் பெற்று எல்லோரும் மன இன்பமிகும்படி இருகின்ற காலத்தில் என்பதாம்.

இச்செய்யுள் பின்வரும் "மாரகாளம்" எனத் தொடங்குஞ் செய்யுளுடன் கூடிமுடியும். இவ்விதம் ஒரு செய்யுள் எச்சமாக நின்று வேறொரு செய்யுளுடன் சேர்ந்து முடிந்தால் அதற்குக் குளகச்செய்யுள் என்று பெயர். என்னை "குளகம்பல பாட்டொரு வினை கொள்ளும்" என்றார் ஆகலின்.

குறிப்பு:— இச்செய்யுளில் சந்திரனை மண்ணுலகிலுள்ளாரும் விண்ணுலகிலுள்ளாரும் வணங்குகிறார் என்று கூறப்படுகிறது. சந்திரனோ தக்ஷமுனிவனது பெண்கள் இருபத்தேழுபேரையும் மணந்தான் என்று புராண வரலாறு கூறுகிறது. ஓர் ஆண்மகன் ஒரு பெண்மகளை மணப்பதுஇயற்கையும்பொருத்தமுமாகும்அவ்வாறின்றி ஒருவன் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை மணந்தால் அவன் அப்பெண்கள் எல்லோருடனும்கூடிக் குடும்ப வாழ்க்கை நடத்துவது எங்ஙனம்? என்ற வினா எழும். எழவே முடியாதுஎன்றே துணிந்து பதில் கூறலாம். ஆகவே அவன் அவ்வொருத்தியுடனேயே கூடிக்குடும்பம் நடத்தமுடிகிறபொழுது அவனால் மணக்கப்பட்ட ஏனைய மகளிர் தங்கள் வாழ்க்கையின்பத்தை இழந்தவராகிறார்கள். இதற்குக் காரணம் அவனேயாகிறான். இங்ஙனம் பல மகளிரின் வாழ்க்கை வீணேகெடுதற்குக் காரணனாக இருந்த ஒருவனிடம் உயர்ந்த பண்பாடு எங்ஙனம் இருக்கமுடியும்? அன்றியும் இச்செய்யுளில் பின்னிரண்டடிகளில் கூறப்படுகிற வரலாற்றைக் கவனிப்போம்

அவ்வரலாறு:—

வியாழகுருவாகிய பிருகஸ்பதியின் மனைவியாகிய தாரையைச் சந்திரன் திருட்டுத்தனமாகக் கவர்ந்தான் அதனால் பிருகஸ்பதிக்கும் சந்திரனுக்கும் பெரும்போர் நடந்தது பிரமதேவர் சந்திரன்பாற் சென்று தாரையை பிருகஸ்பதியிடம் விட்டுவிடும்படிச் செய்தார். தாரை பிருகஸ்பதிக்கு மீண்டும் மனைவியானாள். தாரை சந்திரனாற் கவரப்பட்டு அவனிடம் இருக்கும் காலத்து அவ்விருவருக்கும் பிறந்த புத்திரன் புதன் என்பதாகும்.

இவ்வரலாற்றை நோக்குங்கால் சந்திரன் 'பிறனில் விழைதல்' என்ற குற்றத்தைச் செய்தவனாகிறான். இத்தகைய சந்திரன்பால் மண்ணுலகிலுள்ளாரும் விண்ணுலகிலுள்ளாரும் வணங்கத்தக்க மேம்பாடும், இறைத்தன்மையும் உண்டா என ஆராய்தல் அறிஞர் கடனும்.

—தொடரும்.

ஆசிரியர் குறிப்பு:-இதையொட்டியே வசிஷ்டர், பராசர் வேதவியாசர் போன்றவர்களில் பலருடைய பிறப்பு இழிவுமுறையைக் கைக்கொண்ட (தேவர்) வடவர்களின் கற்பிழந்த தன்மையை எடுத்தியம்பும் சால்புகொண்டு பெருநோக்கத்தோடு தென்னவர் ரிஷி மூலம் நதிமூலம் விசாரியாமல் விடுஎன்றார்கள். விசாரித்தால் மேல்கண்ட ஆபாசங்கள் ஆபாசமான முறைகள் தென்னாட்டவர் கொள்கையில் புகுந்துவிட ஏதுவாகுமெனவே ஆராயாமல்விடுக. என்ற பெருந்தன்மையும்கொண்ட சார்பில் சிறந்தவர்கள் தென்னவர்கள் என்பதும் தெளிவுற விளங்கும்.

நீங்கள் பொய்யாமொழியின் சந்தாதாரரா..?
★ ★ ★
இல்லையேல் இன்றே சேருங்கள்!

பொய்யாமொழி
ஆசிரியர் — ம. பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, ஐப்பசி 30 - புதன். { மணி 12

"துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பா யதூஉம் மழை"

துப்பார்க்கு துப்பு ஆய துப்பு ஆக்கி — உண்பவர்களுக்கு நல்ல உணவை உண்டாக்கி; துப்பார்க்கு துப்பு ஆயதும் மழை—தண்ணீராய் உண்பவர்களுக்குத் தானும் உணவாவதும் மழையேயாகும்.

மழையானது உணவுப்பொருள் விளையவும், தண்ணீராய் உண்ணவும் பயன்படுகிறது.

வியாபார நோக்கமும், பத்திரிகையினுல் மக்களின் நலமும்.

★

வியாபார நிலைக்கு ஒரு பத்திரிகை சுதந்திரமாயிருக்க முடியுமா? ஓர் ஆசிரியன் பணம் சம்பாதிக்கவேண்டியது எதற்காக? உயிர் வாழ்வதற்காகவும், மேலும் மேலும் தொடர்ந்து எழுதுவதற்காகவும். அவன் பணம் சம்பாதிப்பதற்காகவும் எழுதக்கூடாது, எழுதி உயிர் வாழ்தலும் கூடாது.

எந்த ஓர் ஆசிரியன் தனது செல்வ நிலையை அபிவிருத்தி செய்துகொள்வதற்கான ஒரு கருவியாகப் பத்திரிகையை உபயோகப்படுத்துகிருனே அவன் சீர்கேடான இந்த சமூகத்தைக் காட்டிக்கொடுத்து உயிர் பிழைக்க எண்ணிய ஏமாற்றுக்காரன் என்பதோடுறைந்து சமூகத்தை மேலும் அழுகிப்போகச் செய்து மக்களை மாக்களினத்துக்குப் பிற்போக்கில் தள்ளுபவனுவான். பொது நோக்கோடு பார்த்தால் 100-க்கு 90 மக்களுக்கு நன்மைஏற்படும் வழி செய்யஎண்ணும் பத்திரிகையாளனுக்கு சந்தாதார்களும் பொது மக்களும் செய்யவேண்டிய கடமை ஒன்றுண்டெனில் சந்தாதார்கள் பத்திரிகையின் கொள்கையை நிர்ணயிக்ககூடாது. ஆபாச அக்ரமங்கள்கொண்ட ஏடுகளைத்தவிர நீதி நேர்மைகொண்ட பத்திரிகைதான் கொள்கையை நிர்ணயம் செய்யவேண்டும். சர்க்காரும் பிற்போக்கு சக்திகளுக்கு இடம் கொடாமல் தடை விதித்தல், ஜாமீன் கோருதல் முதலிய தடங்கல்களை விலக்கவேண்டும்.

ஒருவன் சமதர்மவாதியாக கொண்டு அதே சமயத்தில் பணம் [illegible] முதலாளியாகவுமிருக்க வேண்டுமானுல் உண்மை மனச்சாட்சியை ஒளித்து வைத்துவிடவேண்டும். ஆனுல் எந்த நேர்மையான பத்திரிகையாளனும் முதலாளித்துவம், பணம் பறித்தல், சமதர்ம பிரசாரம் மூன்றும் ஒன்றுசேர்ந்து நடத்துவது அசாத்தியம். மேலும் சொந்த அச்சகமில்லையேல் கருத்துக்கள் எதுவும் எழுத இயலாது.

வறுமையைக் கொண்ட சிந்தனையாளர்களுக்கு பணம் ஏன் ஒரு சிலரிடம் குவிந்து முடக்கப்பட்டது, பலரிடம் பரவாமல் சிலரிடம் முடங்கியது எப்படி என ஆராய்ச்சி செய்த சிந்தனையாளன் பணத்தைச் சேகரிக்க வேண்டிய முயற்சியை எடுத்துக்கொண்டானுனல் சிந்தனையில்லாத பாமர மக்களிடம் பணத்தைச்சீக்கிரமே சேகரித்துவிடமுடியும். ஆனுல் வறுமையை அனுபவிப்பது சகித்து ஏன் வறுமை உண்டாயிற்று என்று சிந்திக்கும்போது தன்னைப்போல் வறுமையுடையவனை எண்ணித் தான்படும் துன்பம் மற்றைய ஏழ்மையில் சிக்கியவர்களுக்கும் ஏற்படுகிறது என்பதை உணருகிருன். உணர்ந்தும் மக்களின் ஏழ்மையை தாழ்மையை எண்ணுமல் தான் முன்னேற வேண்டியவற்றை எண்ணிப் பத்திரிகை நடத்துபவனே தேசத்துரோகம், சமூகத்துரோகம் முதலிய குற்றங்களுக்குரியவனுய்விடுகிருன். நிலையை உணர்ந்து தானடையும் துன்பம் பிறருமடையாமல் முன்னேறச் செய்பவனே சிறந்த தேசசேவை செய்தவனுவான்.

வறுமையும் - மக்களும்.

மக்களில்வறுமையாளர்களெல்லாம் ஒன்ருய் கூட எண்ணி மனப்போராட்டம் செய்து ஒன்று கூடும் வாய்ப்பையடையவில்லை. பணக்காரனும் மதக்காரனும் அவர்களை பம்பரம்போல் சுழலும்படிச்செய்யபாவபுண்ணியம்போன்றவிதைகளைத் தூவி ஏய்த்து அடிமையாக்கிக்கொண்டுபடிப்படியாய் உள்ள ஏழையையும், படிப்படியாய் ஏற்பட்டுள்ள தாழ்ந்தவனையும் ஏழையை ஏழை மீதும், தாழ்ந்தவனை தாழ்ந்தவன் மீதும் ஏவுகிருன் அன்ருட வாழ்க்கை சிறு தேவை பூர்த்தியினுல் மெய்மறந்து ஏழையை ஏழையே எதிர்த்து ஒழிக்கிருன். அதேபோல் தாழ்த்தப்பட்டவனும் தன்னிலும் தாழ்ந்தவனை எண்ணித்தனக்குமேல் உயர்ந்தவனைப்பற்றி சிந்தியாமல் தனக்குக் கீழ் தாழ்த்தப்பட்டவனை அழுத்தித் தலை எடுக்க

[illegible] உயர்வு தாழ்வுகளை அவ்வப்படியே எ[illegible]லைத்திருக்க எண்ணுகிறான். உடன் பிறந்தே கொல்லுமாம் வியாதி இதை பளிங்கு போல் காட்டி கூறுகிறார் பாரதிதாசன்.

> மக்களெல்லோரும் சமமென மாநிலம் தந்ததில்
> பசிமிக்கவரின் தொகை கொஞ்சமோ [வஞ்சமோ
> மக்கள் பசிக்க, மடத்தலைவர்க்கெனில்
> வாழை இலை முற்றும் நறு நெய்யாம்
> இது மிக்குயிர்மேல் வைத்த கருணையாம்
> பாதிக்குதே பசிஎன்றுரைத்தால் செய்த
> பாவத்தை காரணம் காட்டுறார்
> மதவாதத்தை உம்மிடம் நீட்டுறார்.

அதனால் மக்கள் தம் தம் நிலையைத் திருத்தியமைத்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இருந்தும் அறியாமையால் எதைஉணராமையால் எல்லாச் செல்வங்களுக்கும் மூலமாயிருப்பது உழைப்பு. ஆனால் கோடிக்கணக்கான மக்களுக்கு உழைக்கும் சக்தியைத்தவிர்த்து வேறெவ்விதமான மூலதனமுமில்லை.

பணக்காரர்கள் எல்லாவித சலுகைகளையும் அனுபவிக்கிறார்கள். உழைப்பாளிகளோ ஒன்றும் இல்லாதவர்களாயிருக்கிறார்கள். இருவருடைய நலன்களும் நேர் விரோதமானவை. ஆனால் இவர்கள் எப்போதும் போராடியே தீரவேண்டியிருக்கிறது. பணக்காரர்களுடைய நிலைமை எவ்வளவுக் கெவ்வளவு அபிவிருத்தியடைகிறதோ அவ்வளவுக்கவ்வளவு உழைப்பாளிகளின் நிலைமை கேவலமடைகிறது.

மக்களின் கேவல நிலையுணர்ந்த பொதுநல ஊழியன் ஏழ்மையை தாழ்மையை ஒழிக்க வேண்டிய வகைதேட முயற்சிக்கிறான். ஆனால் எந்த ஏழ்மைக்காக தாழ்மைக்காக உண்மையில் பாடுபடமுன்வந்த தலைவர்களை, இயேசு அவர்களை சிலுவையில் அறைந்ததுபோல, நபி நாயகம் அவர்களை கல்லாலடித்துத் துரத்திக்கொடுமைக்குள்ளாக்கியதுபோல சீர் திருத்தம் பேசிய வேலாயுதத்தைத் தூக்கிலிட்டதுபோல் ஏன் சுதந்திரம் வாங்கித்தந்த நாம் கண்ட ஒப்பற்ற அருமைத்தலைவர் அஹிம்சையின் சின்னம் ஏழை பங்காளன் தாழ்த்தப்பட்டவரின் நண்பன் மகாத்மா காந்தியடிகளையே கொன்று ஒழித்த இனமாக மக்களிருப்பது என்னே கொடுமை! இவைகளை மக்கள் உணரும் நாள் எந்நாளோ அந்நாளில்

> " உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
> சேரா தியல்வது நாடு "

நமது நாடு நன்னாடாகும்.

ஆசிரியருக்குக் கடிதங்கள்.

வன்னியப் பெருங்குடி மக்களின் வருத்தம்

உடையார்பாளையம் அக். 28

சென்னைமாகாணத்தில் தென்னாற்காடு ஜில்லாவிற்கு அடுத்தபடியாக வைத்து எண்ணப்படும் பெருவாரியாக 80சத விதம் வசிக்கும் வன்னியப் பெருங்குடி மக்கள் வாழும் திருச்சி ஜில்லா உடையார்பாளையம் தாலூகாவின் காங்கிரஸ் கமிட்டி தேர்தல் அறிக்கையை 27-10-50 தினமணியில் பார்த்து உளம் நொந்தோம். தற்காலம் ஆட்சிபுரியும் காங்கிரஸின் குடிஆட்சியைக்காண தியாகத்தீயில் இறங்கினோம். உற்றார், உறவினர், பெற்றோர் பெண்டு பிள்ளை யாவும் மறந்து, பிறந்து வளர்ந்த ஊரையும் துறந்து சிறைசென்றோம். அஞ்சினோமில்லை. மகாத்மா காந்தி அடிகளின் ஆணையை மீறினோமில்லை. நம் மரபினர் எண்ணற்றவர் தியாகத்தில் ஈடுபட்டு உயிரையும் விட்டனர். பின் ஆகஸ்டுதியாகிகளுக்கு மானியமும்விடப்பட்டது அவ்வப்போது கவனித்து வந்தவர்களுக்கு நன்செய்நில மானியமும், பாழும் பாட்டாளி மக்களுக்கு மேட்டாங்கால் தரிசும், காடு கரம்புகளிலும் மானியம் விடப்பட்டிருக்கிறது. ஏன் பட்டாளம் சென்று பதை பதைத்து மடிந்தனர் நம் மரபினர் பலர். ஏன் இவ்வாட்சியை காணத்தான். இவ்வளவும் கண்டு சகித்த நம்மரபினர்மனம்சாந்தியடைய யாரையேனும்காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் தேர்தலில் பொறுக்கப்படவில்லை. தேசம் முதற்கொண்டு கிராமம்வரை தேர்தல் நடக்கிறது ஆனால் நம் மரபினர் நிம்மதியுற்றதாயில்லை. திருச்சி ஜில்லா போர்டு தேர்தல் ஞாபகம் இன்னும் வரவில்லையா

வன்னியப் பெருங்குடி மக்களே வீறிட்டெழுங்கள்! காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர் தேர்தல் நம்மை, ஏன் நம் மரபினரை புறக்கணித்து விட்டது. வரப்போகும் சட்டசபைத் தேர்தலில் வெற்றிபெற்று நம் மரபு முன்னேற்றமடைய ஒவ்வொரு வன்னியருடைய இரத்தத்திலும் இன உணர்ச்சி ஊறி வன்னியன் வாக்குச் சீட்டு அன்னியன் பெறுதவாறு ஒற்றுமையாகப் பாடுபடுங்கள்.

வாழ்க வன்னிய சமூகம்! வீழ்க அன்னியர் சூழ்ச்சி!

கா. சி. வெங்கிடாசல படையாட்சி

தீவிர காங்கிரஸ் பஞ்சாயத்து அங்கத்தினர்

பொய்யாமொழி

வார இதழ்

சந்தா விபரம்

ஆண்டு			ஆறு மாதம்			தனிப்பிரதி		
3	0	0	1	12	0	0	1	0

கதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள், யாவும் கற்பனையேயன்றி யாரையும் குறிப்பிடுவன அல்ல.

புதுமை பொங்குக..!

சி. சி. எல். பதி.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான் புகழ்க்கொண்ட தமிழ் நாட்டிலே உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்பது அன்று, ஆம், கி. மு. 1000-ல் ஆடு மாடு மேய்த்துக்கொண்டு சிந்துவைக்கடந்து இங்கு இன்று அரசியலிலும் ஏறியிருக்கின்ற ஆரியன் வருகைக்கு முன்புதான் என்று கூறிவிடலாம். வேண்டாம், "மறைந்தமலை" மறைமலையடிகளாரும்கூட அப்போதே கூறிவிட்டார். என்ன என்று சிந்திக்கிறாயா? .... வள்ளுவன் காலத்தோடே உயர் நற்றமிழர்கள் மாய்ந்து விட்டார்கள் என்று. இதில் வியப்பொன்றுமில்லையே!

இடைபட்டக் காலத்திலே எச்சார்புடையவனும் வள்ளுவன் குறளை வானுற வாழ்த்தினனே! எங்கே? இன்று அந்தக்குறளின் தன்மையையும் அதன் தொன்மை யையும் சற்றே தமிழன் உணர்ந்துவிட்டான் உண்மையை சிந்திக்கத் தலைப்பட்டுவிட்டான் என்ற காரணத்தால் எவனாவது அதைப்பற்றி வாயைத்திறக்கின்றானா?......... இல்லையே! காரணம்? அரசாங்கம்கூட அவ்வளவாக அக்கரை காட்டவில்லையே! நாட்டின் அறவுரைகளை சுதந்திர நாட்டில் பரப்பக்கூடாது என்று ஏதாவது சட்டம் இருக்கிறதா? அப்படியும் ஒன்றும் இல்லையே! எனில் இதன் பொருள்தான் என்ன? வீட்டுக்காரன் வீட்டை அதிக பாதுகாப்பாக வைத்துக்கொள்ள ஆரம்பித்துவிட்டால் கன்னக்கோல் என்ன செய்யும்? உறைக்குள் தான் பாய்ந்திருக்கும்.

இந்த நிலை ஏற்படும், நீ குறளைநாடி ஓடிவரும்போது உன் நாட்டில்; என்று ஆசிரியனார் பொய்யாமொழியும் சிந்திந்தாரோ என்னவோ! அழகாக அமைத்துவிட்டார் ஒரு குறளை நாடு என்ற அதிகாரத்திலே......

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பும் இல்லது நாடு'

நாட்டிடை. மலியும் நானாவித மதங்களும், கூட்டத் தினரும், நாட்டை நச்சுப்பொய்கைக்கு நடத்திச்செல்லு கின்ற நாசகார விபீடணத் தோழர்களும், கோட்சேக் களும் இல்லாத ஒரு நாடே நனிசிறந்த நாகரீகநாடு, உயர்ந்த நாடு, உன்னத நாடு என்றார்.

ஆகவே இவ்விதக்கும்பல்கள் உன் நாட்டில் குவிந்து கிடக்கின்றது, குதர்க்கமும் புரிகின்றது. இதை இனியும் விட்டுவைக்கலாமா? வேரோடல்லவா கல்வி வெந்நீர் ஊற்றவேண்டும் பயிரிடைத்தோன்றிய களையைப்போல்!

திடீரென்று இப்படிச் சொல்லிவிட்டால், வரையறை கட்டுப்பாடு, நீதி ஒன்றும் இல்லையா? என்று கேட்க எண்ணுகிறதல்லவா? அதற்கும் இருக்கிறது தமிழ் மறையில் ஆதாரம். ஆதாரமின்றி சொல்லிவிடத்தான் முடியுமா? இந்த அறியாத நாட்டிலே புரியாத ஆட்சி யிலே தெரியாமல் ஒரு செயலை!

இந்துக்கள் வேதமல்ல, தமிழர் மறை வள்ளுவர் வகுத்த சட்ட நூல் அதில் இரண்டாவது தொகுதியில், முதலாவது பகுப்பில் 16-வது பிரிவில் மூதல் சட்டத்தின்படி.

" ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வதே முறை"

ஒரு பக்கமும் சாராது நடுநிலை நின்று பிழையினை ஆராய்ந்து அதற்குகந்த தண்டனையை கட்டாயம் கொடுத்துவிடு! போதுமா? உத்தரவு. நான் சொல்ல வில்லை வள்ளுவனார் வாய்மொழி!

எழுந்திரு! நிமிர்ந்துபார்! காலத்தை தெரிந்து கொண்டாயா? காலச்சக்கரத்திலே உன்வாழ்க்கைச் சுழல் நீர்க்குமிழி என்று எண்ணி ஏமாந்து போகாதே! தூங்காதே! உனக்கில்லாவிட்டாலும் உன்வருங்கால சந்ததியாவது வகையாய் வாழ. எப்படியும் உன்காலத்தி லேயே வழிவகுத்துவிடு. மற்றதை இயற்கை பார்த்துக் கொள்ளும். அண்டை வீட்டுக்காரனுக்கு கதவை பிடுங்கி கொடுத்துவிட்டு நாய் ஓட்டியது போதும். இனியும் ஏமாற்றும் வகையில் வாழ்க்கையைநடத்தி விடாதே.

நாடு ஒருமாதிரியாக உணர்ந்துவிட்டது உண்மையை நாலாம்சாதி, ஐந்தாம்சாதி நச்சுப்பொய்கையென்று, ஆண்டான், அடிமை; அரசாளப்பிறந்தவன், அவன் அடிவருடப்பிறந்தவன் யார், யார் என்று அலசிப்பார்த்து விட்டத இன்றைய சமூகம். பாரதியும் அதற்குப் பக்க மேளம் வாசிக்கிறார் "ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை சாதியில்—இழிவு கொண்ட மனிதரென்ப திந்தியாவில் இல்லையே—சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே—முப்பதுகோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடைமை எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள்"

ஆகவே காலம் நெருங்கி விட்டது. இப்போது நீ ஞாலமே கருதினாலும், வேண்டினாலும்கூடக் கட்டாயம் கிடைத்தேதீரும் என்பதாக வள்ளுவர் ஒரு நீதி வகுத்தி ருக்கிறார் காலமறிதல் என்ற அதிகாரத்திலே...!

"ஞாலம் கருதினும் கைகூடும் காலமறிந்து
இடத்தற்செயின்"

நாம் வேண்டுவது ஞாலத்தையல்ல வள்ளுவன் வாழ்ந்த வையத்தை தமிழகத்தைதான், அங்கே நிலவும் அநாகரீகக் கோட்பாட்டை அழிக்கத்தான் ஆகவே உன் லட்சியம் ஈடேறும். கடமையுணர்ந்து கடனாற்றத் துணிந்தவனுக்கு கிடைக்கப்போவது வெற்றியோ! தோல்வியோ! என்று எண்ணவேண்டிய அவசியமே யில்லை. அந்த ஆணித்தரமான முடிவை இயற்கை தானே கூட்டிவைக்கும் என்பதாக குடிசெயல் வகையில் ஒரு குறளை வீசி வைத்தார்

"சூழாமல் தானே முடிவெய்தும் தங்குடியை
தாழாது ஞற்று பவர்க்கு".

என்று; பலவாறாக வள்ளுவர் உனக்கு உண்மையை விளக்கி உத்தரவுபிறப்பித்து விட்டார். புதுமைக்கு வழி காட்டிவிட்டார் புகலிடம் நோக்கியல்ல போர்க்களம் நோக்கிப்பாய வேண்டியவர்களாகி விட்டோம் அதோ ! பாரதிகூட ஏதோ சொல்கிறார் "உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை" ஆம் அச்சம் அறிவையே மயக்கும். எனவே அச்சம் தவிர் குமரி யிலிருந்து ஆரம்பி உன் குண்டு வீச்சை, இமயத்தில் எதிரொலிக்கட்டும். வெற்றி நமதே! வள்ளுவன் வாழ்ந்த நாட்டில் மறுபடியும் புதுமை பொங்குக! எங்கும்வெற்றி விழா!! வாழ்க தமிழ்!!!

★

செய்திகள்.

விவசாயிகளுக்கு அறிவிப்பு.

21/8X5/8 அளவு வண்டிக்கட்டுகள் திருச்சிமார்க்கட்டிங் சொசைடியில் வந்துளது. திருச்சி ஜில்லாவாசிகள் தங்கள் தங்கள் கிராமங்களில் கி. மு. விடம் அத்தாக்ஷி வாங்கிப் போய் கட்டுகள் வேண்டியவர்கள் வாங்கலாம். ஒரு ஜதைக்கு கிரையம் ரூ 30—3—0 ஆகிறது.

ஃ ஃ ஃ

மாணவர் இலக்கிய மன்றம், செயங்கொண்டம்.

செயங்கொண்டம் உயர் நிலைப்பள்ளி மேல்படிவ மாணவர் இலக்கிய மன்ற கூட்டம் 30—10—50ல் திரு, மா. ச. ஆசிர்வாதம் B. A., அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அப்பொழுது ஆரும்படிவ மாணவர் திரு. அ. இராமசாமி அவர்கள் "நூல்நிலையம்" என்னும் பொருள்பற்றி பேசினர். இதையொட்டி திரு, நாகராசன் K. V. ராஜமாணிக்கம், R. மணவாளன், பழனிசாமி இவர்கள் மாணவர்களுக்கு புரியும்படியும் எளிய நடையில் சொற்பொழிவு நிகழ்த்தினர்கள். பிறகு தலைவர் முடிவுரையுடன் பொதுச்செயலாளர் R. ஆளவந்தார் நன்றிகூறி கூட்டம் இனிது கலைந்தது

ஃ ஃ ஃ

உணர்ந்த ஆரியம் (பார்ப்பனர்.)

(நரசிம்ம அய்யர், திருமலைவாடி.)

தமிழருக்கு சமையல்வேலை செய்வதற்கு வீட்டுக்கு வருவதாகவும் தமிழர் வீட்டில் சாப்பிடுவதாகவும் இனி மேல்ஜாதி, கீழ்ஜாதி (சூத்திரன்) என்பது புராணக் கட்டுக்கதை என்றும் அது வயிற்றுபிழைப்புக்கு எழுதி வைத்து வயிறுவளர்த்தது என்றும் இனிமேல் திராவிட தந்தை பெரியார் ஈ. வே. ரா. அவர்கள் கிளர்ச்சியின் பயனுக இன்நாங்கள் மேல்ஜாதி என்ற ஆணவபோக்கை மாற்றிக்கொள்கிறேன் என்று என்னிடம் கையொப்பமிட்டு உறுதிகூறி இருக்கிருர்.

இங்ஙனம்,
K. P. தங்கவேல்,
தி. க. தலைவர், ஆ. பட்டாகாடு.

ஃ ஃ ஃ

சென்னையிலும், குன்றத்தூரிலும், ராமராஜ்யம்!

சகிக்காத சம்பவம்! காணப்படாத காட்சி!
கொதிப்பூட்டும் நிகழ்ச்சி! வேதனையூட்டும் விசித்திரம்
ஆனுலும் நடந்தது,
24—10—50 செவ்வாய்க்கிழமை
என்றென்றும் நாம் மறக்கமுடியாத நாள்!

அன்றையதினம்தான் டில்லி ஆதிபத்யத்தின் தூதுவர்
அன்பர் ஆச்சாரியார் சென்னைக்கு வந்தார்.
அதுபோது திராவிடம் பெற்ற பரிசுகள்:-
1000 பேருக்குப் படுகாயம் 60 பேர் கைது. 34 பேருக்குச் சிறைவாசம்

குன்றத்தூரில் 26—10—50-ல் பேச்சுரிமைப்போர் கூட்டத்தில் ஏழுமுறை துப்பாக்கிப் பிரயோகம். பொது மக்களுக்கு பலமான தடியடி! எண்ணற்றத்தோழர்கள் இரத்த வெள்ளத்தில்! பலர் கைது!

டில்லியுடன் இணைந்திருப்பதால் நாம் பெற்ற பரிசுகள் இவை.

இனியும் நாம் டில்லியுடன் இணைந்திருப்பதுதான் நியாயம் என்று கருதுகிறீர்களா? திராவிடர்களே.

இங்ஙனம்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்,
செயங்கொண்டம்.

ஃ ஃ ஃ

நூல் ஆலோசனைக் கமிட்டி கூட்டம்.

1—11—50 செந்துரை செண்டர் டெக்ஸ்டைல் ஆலோசக கமிட்டி மருதூர் S. S. R. முத்துக்குமரசாமி முதலியார் தலைமையில் மாலை 2-30 மணிக்கு தொடங்கியது.

நிர்வாகக் கமிட்டி மெம்பர்கள்:— தலைவர் S. S. R. முத்துக்குமரசாமிமுதலியார் K.A. சின்னசாமி முதலியார் S. சாமிநாத முதலியார், எலையூர். V. அழகப்ப முதலியார், வாரியங்காவல். K.S. குப்புசாமி முதலியார் செங்குந்தபுரம். தி. வை, கனகசபை முதலியார், பொன்பரப்பி, T. V பக்கிரிசாமி முதலியார், பொன்புரப்பி. P. C. மாசிலாமணி முதலியார், குவாகம். K. பெரியசாமி முதலியார், நல்லாம்பாளையம்.

கமிட்டித் தலைவர், S. S. R. M. அவர்களால் வந்திருந்த கமிட்டி மெம்பர், வியாபாரிகள் அனைவருக்கும் இடைவேளை காபி பலகாரமும் உணவும் அளிக்கப்பட்டு இரவு 7 மணிக்கு கூட்டம் S. சாமிநாத முதலியார் அவர்களால் நன்றிகூறலுடன் கூட்டம் முடிவுற்றது.

ஆசிரியர் குறிப்பு;— M/S. அழகப்பா கார்பரேஷன் நூல் டெப்போ நூலை திருச்சியில் வைத்துக்கொண்டு வீதம்வரும் 2½ பவுண்டு நூலுக்கு அதிகாரர்கள் கிரமப்படி கமிட்டி தலைவரிடம் கையெழுத்துவாங்கி 60 மைல் ரூ. 7—0—0 செலவில் போனாலும் மொத்தமுள்ள 2800 தரிகார்டு கெ. லிஸ்டுபோல் 1 புத்தகம் எழுதிவாங்கி வரச்செல்லி திருப்பி அனுப்புகிருர்.

காரணம்நாளை ஒட்டி குறிப்பிட்ட நாட்களுக்குக்குள் நூல் வாங்காததால் தன்னிஷ்டபடி B. M ல் விற்கலாமென்ற போசனையும் தங்களின் மேல் கண்ட்ரோல் சாவியிருப்பதும் பம்பாய் டெக்ஸ்டைல் கமிஷனர் தயவு தனக்கிருப்பதால் தான்எதுசெய்தாலும் தன்னை ஒருவரும் அசைக்க முடியாது என்று போகும் தரகர்களிடம் வீம்பு பேசுவதாய் வருகிற வதந்தி வாஸ்தவமா?

செய்திகள்

திராவிட மாணவர் முன்னேற்ற கழகம், செயங்கொண்டம்

செயங்கொண்டம் அக். 30

ஆச்சாரியார் வருகையின் பொழுது சென்னையிலும் பேச்சுரிமைப்போரின் சமயம் குன்றத்தூரிலும் தடி கொண்டு தாக்கியும் துப்பாக்கி கொண்டு சுட்டும் அடக்கு முறை செய்த ஆட்சியாளர் போக்கை கண்டிக்கும் முகத் தான் 28-10-50உ மாலை 3மணிக்கு தோழர், 'இளநாகன்' அறையில் ஒரு கண்டன கூட்டம் கூட்டப்பட்டது அதுபோது தோழர் அரங்கனுதன் தலைமையில் தோழர் கள் இலக்குவன், இளநாகன், 'வேலாயுததாசன்' ஆகி யோர் காங்கிரஸ்ஆட்சியினர் கண்மூடித்தனமாக சென்னை யிலும், குன்றத்தூரிலும் நடந்துகொண்டதை கண்டித்து சொற்பொழிவாற்றினர்.

அவ்வமயம் திராவிட மாணவர் முன்னேற்ற கழகம் நிறுவப்பட்டது. தோழர்கள் இளநாகன் செயலாளராக வும் இலக்குவன் துணை செயலாளராவும் கூத்தரசன் பொருளாளராகவும் வேலாயுததாசன் விளம்பர உறுப் பினராகவும மற்றும் இவர்களைக்கொண்ட 'செயற்குழு' ஒன்று நிறுவப்பட்டது. 30 பேர் தங்களை உறுப்பினர் களாக பதிவு செய்துக்கொண்டார்கள்.

9-11-50உ முதல் இதழ் வெளிவந்துவிட்டது.

எழுத்தில்...! ஓவியத்தில்...!
காவியத்தில்...! சிற்பத்தில்...!
கதையில்...! விஞ்ஞானத்தில்...!

"கலைஞன்"

(மாத இதழ்)

ஆசிரியர்: சிதம்பரம், ஜெயராம்.

தனிப்பிரதி விலை 4 அணா.

விபரங்கட்கு:-
மானேஜர்,
"கலைஞன்" காரியாலயம்,
தபால் பெட்டி நெ. 18 சிதம்பரம்.

எல்லா ஊர்களிலும் கிடைக்கும். ஏஜண்டில்லாத ஊர்களுக்கு முன்பணம் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

அதுபொழுது 1. சென்னை ... காங்கிரஸ் ஆட்சியினர் ஜாலியன் வால... போன்று நடத்திய வெறியாட்டத்தை ... 2. தடியடிக்கும் துப்பாக்கி குண்டுகளுக்கும் ...க்காகிய தோழர்களை பாராட்டியும், 3 இவ்வாரம் திராவிடநாடு இதழில் வரும் முக்கிய செய்திகளை துண்டு பிரசுரம் மூலம் மக்களுக்கு அறிவிப்பதென்றும் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டு செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிந்தது.

2ம்பக்க தொடர்ச்சி

நாட்டின் தலைவரை இருப்பவன் உலகத்திற்கே தலைவனாகவும் வேதாசல முதலியார் போன்றூர் (வேலைக்காரி) பணத்தை மேலும் பெருக்கவும், பல டாட்டாக்கள் தொழிற்சாலைகளை நாளுக்குநாள் பெருக்கவும், ஆசைப்படுகின்றனர். அவர்களின் பேராசை என்றுமே தணியாது. பேராசையுடனேயே மடிய வேண்டும். பணத்தை மூலதனமாகக்கொண்டு தொழில் செய்பவன் முதலாளி. பணமூட்டைகள் எல்லாம் ஏழைகளின் ரத்தத்தை உருஞ்சும் அட்டைகள். இவை களில் வடநாட்டு அட்டைகள், தென்னுட்டு அட்டைகள் என்று பிரிக்கவேண்டிய அவசியமில்லை. வடநாட்டு அட்டைகள் ரத்தத்தை அதிகமாக உறிஞ்சி, ஊதி உப்பி பருத்து இருக்கலாம். தென்னுட்டு அட்டைகள் சிறிது இளைத்து இருக்கலாம். ஆனுல் எல்லாம் அட்டைகளே.

மக்கள் எல்லோருக்கும் அடிப்படையான தேவைகள் அளிக்கப்பட்டுள்ளனவா ? இல்லை. 100க்கு 80 பேர் உடைக்கும், உணவுக்கும், இல்லத்திற்கும் போராடி மடிகின்றனர். இவர்கள் நாடுவது சுகபோகமா? அன்றி வைகுண்டமா? நிலமற்றவனும், வேலையின்றி வாடு பவனும் தன் ஒரே புதல்வனுக்கு உணவு, உடை. கல்வி முதலியன கொடுக்க தவிக்கும்போது அவர்கள் மக்கட் செல்வத்தையா அனுபவிக்கின்றனர். அவர்கள் வருந்தி அழைப்பது சாவையே தவிர வாழ்வு அல்ல.

பொருளில் லார்க்கு இவ்வுலக மில்லை
அருளில் லார்க்கு அவ்வுலக மில்லை.

என்ற கருத்து யாது? உலகத்தில் வாழவேண்டு மெனில் பொருள் இருக்கவேண்டும். பொருளைக்கொண்டு தான் மற்ற வசதிகளை அமைத்துக் கொள்ளவேண்டும். ஒரு நாட்டின் வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்ப, வேண்டிய வசதிகளை செய்துகொள்ளும் அளவுக்குமேல், அதிகமாக உடையவன் பணக்காரன். வாழ்க்கை வசதிகளைச் செய்துகொள்ள முடியாமல் தவிப்பவன் ஏழை.

தோழர் கூறும், செல்வந்தன் என்பதற்குரிய விளக்கத்தின்படி பணக்காரன், முதலாளி, செல்வந்தன் யாவும் ஒன்றே எனக்கொள்வதற்கில்லை. செல்வந்தன் வேறு. பணக்காரன், முதலாளிஎன்பது வேறு, விளக்கம் தேவைப்படின் பின்னர் தரப்படும்.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketcheri Street, Jayankondacholapuram.